**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 17.12.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 05°செ முதல் 09°செ ஆகவும் பதிவானது..

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 17.12.2025 மற்றும் 18.12.2025 ஆகிய நாட்களில் இலேசான துாரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 30°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-14 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழையின்றி குளிர்ந்த காற்றானது மணிக்கு 8-14 கிமீ வரையிலும் வீசக்கூடும். வெப்பநிலையானது 1-2 டிகிரி செல்சியஸ் வரையிலும் சராசரியிலிருந்து குறைந்து காணப்பட வாய்ப்புள்ளது. அனைத்து பயிர்களுக்கும் மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்யவும்.
- மாலை நேரங்களில் தெளிப்பான்கள் மூலம் தெளிப்பது பயிர்கள் உறைபனியினால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும்.
- நெல்லில் குலைநோய் வருவதற்கான சாதகமான காலநிலை இருப்பதால் விவசாயிகள் வயலை நன்கு கவனித்து தாக்குதல் தென்பட்டால் முதலாவதாக ஒருலிட்டர் தண்ணீருக்கு1 கிராம் டிரைசைக்ளோசோல் என்ற அளவிலும் இரண்டாவது முறையாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் கார்பன்டசிம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையால் நெல்லில் லட்சுமி நோய் (மஞ்சள் கரிப்பூட்டை நோய்) பரவ வாய்ப்புள்ளதால் விவசாயிகள் வயலை நன்கு கண்கானித்து ஆரம்ப அறிகுறிகள் தென்படும் பொழுது புரபிகோனசோல் என்ற பூஞ்சாண கொல்லியை 1 லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- கொண்டைக்கடலையில் தற்போது நிலவும் சூழ்நிலையால் வாடல் நோய் வரவாய்ப்புள்ளது. இதனை வராமல் தடுக்க சூடோமோனோஸ் புளோரோசன்ஸ் என்ற உயிர் பூஞ்சாணத்தை ஒரு எக்டருக்கு 2.5 கிலோ என்றளவில் இடவேண்டும்.நோய் தாக்கியிருக்கும் இடங்களில் ஒரு சத கார்பன்டெசிம் கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் வெடித்துள்ள பருத்தியை காலை நேரத்தில் பறித்து நல்ல மற்றும் பாதிக்கப்பட்ட பருத்தியை பிரித்தெடுத்து நல்ல பருத்தியை மணல் மேடையின் மீது சேகரிக்கவும்.
- தென்னை மரத்திற்கு இரண்டாவது முறையாக யூரியா 650 கிராம் + சூப்பர் பாஸ்போட் 1 கிலோ + மீயூரிட்டா பொட்டாஸ் 1 கிலோ கலந்து 50 கிலோ மக்கிய எருவுடன் இடுவதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.

- வாழையில் தற்பொழுது நிலவும் வானிலையால் சிக்கடோக்கா இலைபுள்ளி நோய் வேகமாக பரவ வாய்ப்புள்ளதால் விவசாயிகள் வயலை நன்கு கண்கானித்து ஆரம்ப அறிகுறிகள் தென்படும் பொழுது மேங்கோசெப் என்ற பூஞ்சாண கொல்லியை 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- மஞ்சள் கிழங்கு உருவாகும் நிலையில் இருப்பதால் தண்ணீர் குறிப்பிட்ட இடைவெளியில் கொடுப்பது கிழங்கு உருவாவதை எளிதாக்கும்.
- திராட்சையில் வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் சாம்பல் நோய் வரவாய்ப்புள்ளது. வயலை நன்கு கண்காணித்து 0.3 சத நனையும் கந்தகம் தெளிக்கவும் அல்லது ஒரு எக்டருக்கு 6 முதல் 12 கிலோ கந்தகத் தூளை காலை நேரங்களில் தூவவும்.
- கறவை மாடுகளுக்கு ஏற்படும் மடிவீக்க நோயினை தவிர்க்க பால் கறப்பதற்கு முன் மடியை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலில் கழுவவும்.
- கால்நடைகள் மற்றும் கோழிகளை நிலவும் குளிர்ந்த காற்றிலிருந்து பாதுகாக்க உலர்ந்த தடிமனான சாக்குபைகளை ஜன்னல் மற்றும் கதவுகளை மறைத்து தொங்கவிடவும்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 17.12.2025 முதல் 19.12.2025 ஆகிய தினங்களில் இலேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 – 30°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 23 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 30-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- நெல்லில் தண்ணீர் தேங்கியுள்ள வயல்களில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும்.
- தேங்கியுள்ள நீரை வடித்தவுடன் வரிசை நடவு மேற்கொண்டுள்ள வயல்களில் கோனோவீடர் கருவி மூலம் மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.
- வளர்ச்சி சரியில்லாத இடங்களில் வளர்ச்சியை மேம்படுத்த ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம்பிண்ணாக்கு கலந்து 1 நாள் இரவு வைத்திருந்து அதனுடன் 17 கிலோ பொட்டாஷ் கலந்த வயலில் தூவவேண்டும்.
- மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாவால் பயிர் அழுகல் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஏக்கருக்கு 100 கிராம் கார்பன்டசிம் அல்லது 200 கிராம் டிரைக்கோசோல் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிற்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்

## 3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 17.12.2025, 18.12.2025 ஆகிய நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 26-31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19-22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

**மானாவாரிபயிர்கள்**

- பருத்தி பயிர் மொட்டு பருவத்தில் முதல் பருத்தி வெடிக்கும் பருவம் வரை உள்ளது. அதிக ஈரப்பதம் காரணமாக செர்கோஸ்போரா நோய் பரவ வாய்ப்பு இருப்பதால் காப்பர் ஆக்ஸிகுளோபரைடு ஏக்கருக்கு 500 கிராம் விதம் தெளித்து கட்டுப்படுத்தவும்.
- மக்காசோள பயிர் சோளக் கதிர் உருவாகுதல் முதல் அறுவடை வரை உள்ளது. மழை மற்றும் காற்று காரணமாக பயிர்கள் சாய்ந்து விடாமல் தடுக்க மண் அனைக்கும் நடவடிக்கை எடுக்கவும்.

**நீர்பாசனபயிர்கள்**

- நெல் பயிரானது நாற்றங்காலில் மற்றும் நடவு பருவத்தில் உள்ளது. பயிர் தேவைக்கான அளவு பாசனம் செய்யவும்.
- நெல் தூர்கட்டுதல் பருவத்தில் அதிக ஈரபதம் காரணமாக செம்பள்ளி நோய் பரவ வாய்ப்பு இருப்பதால் மேன்கோசெப் 500 கிராம விதம் தெளித்து கட்டுப்படுத்வும். பயிர் வளர்ச்சிக்கு உரம் இடவும்.
- வாழை அனைத்து பருவத்திலும் உள்ளது. அதிக காற்றின் காரணமாக மரங்கள் சாய்ந்து விடாமல் இருக்க மரங்களுக்கு முட்டுகொடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். 17.12.2025 முதல் 20.12.2025 ஆகிய தினங்களில் இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 25-31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19-23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 10-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. இதன் அறிகுறிகள், இலைகள் ஊதுகுழல் போல் சுருண்டு அதனுள் புழுக்கள் இருந்து கொண்டு இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிட்டு கழிவுகளை வெளியிடும். இதனால் இலைகள் வெள்ளை நிறத்தில் மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின் போது ஒட்டு மொத்த வயலும் எரிந்தது போல காணப்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டையை முறையே நடவு செய்ததிலிருந்து 37, 44, 51வது நாட்களில் கட்ட வேண்டும். பயிருக்கு அதிகப்படியான யூரியா உரம் இடுவதை தவிர்த்திடுங்கள். ஏக்கருக்கு ஒன்று என்ற அளவில் விளக்குபொறி வைக்கவும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் வேப்பங்கொட்டை கரைசல் அல்லது 5 மில்லி குலோரிபைரிபாஸ் 20 சதவீத மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**எள்**

எள் பயிரில் (பச்சைப்பூ) பூவிலைநோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலினால் செடியின் அனைத்து பூக்கும் பகுதிகளும் பச்சை இலைகளாக மாறும். பூக்கும் பாகங்களின் நரம்புகளில் உள்ள பச்சை நிறமானது வெளிர்ந்து காணப்படும். தீவிரமாக பாதித்த பகுதிகளில் பூக்கள் முழுவதும் சிறு சிறு இலைகளாக அடர்ந்த நிலையில், சிறிய இடைக்கணுக்களைக் கொண்டு கிளைகள் வளைந்து காணப்படும். காய்கள் வளர்ந்தாலும் அதில் விதைகள் காணப்படாது. இப்பூவிலை வைரஸ் நோயானது ஓரோசியஸ் அல்பிசின்டஸ் எனும் தத்துப்பூச்சியினால் பரவுகிறது. இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 35கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்சிக்குளோரைடு உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கவும்.

***நிலக்கடலை***

*நிலக்கடலை பயிரில் பூவை தக்க வைத்தல் மற்றும் நெற்று நிரப்புதல் தன்மையை அதிகரிக்க, கடலை விதை விதைத்த **35**ம் நாள் மற்றும் **45**ம் நாள் ஒரு எக்டேருக்கு **5** கிலோ நிலக்கடலை ரிச்சினை **500** லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு தெளிப்பாக தெளிக்க வேண்டும்.*

***மக்காச்சோளம்***

*மக்காச்சோளம்ப் பயிரில் குருத்து ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக் குருத்தைதாக்குகிறது. இதனால் நடுக்குருத்து அழுகி விடும். ஒரு எக்டருக்கு **12** என்ற எண்ணிக்கையில் மீன் இறைச்சிப் பொறியினை அமைத்து குருத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு **100**மில்லி என்ற அளவில் குளோரோட்ரானிப்ரோல் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.*

***பருத்தி***

*பருத்தி பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் பிரச்சனை ஆங்காங்கே காணப்படுகிறது. இதனை சரி செய்ய, பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி பயிரில் ஒரு ஏக்கருக்கு **2½**கிலோ என்ற அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பருத்தி பிளஸ் எனும் வளர்ச்சி ஊக்கியினை **200** லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும். இதன் மூலம் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் குறைகிறது. காய் வெடிக்கும் தன்மை மற்றும் பருத்தி விதை விளைச்சல் அதிகரிக்கிறது. மேலும் இது பருத்திச் செடிக்கு, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொடுக்கிறது.*

***தக்காளி***

*பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்ட உரமிடுதல் நல்ல பயனளிக்கும். காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழியாக அல்லது இலை வழியாக தெளிக்கவும்.*

***கத்திரி***

*நிலவும் பருவச்சூழ்நிலையில் கத்திரி பயிரில் கண்ணாடி இறக்கைப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகைப் பூச்சியின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாய் மாறி விடும். சேதமடைந்த இலைகளானது பூச்சியின் உரித்த தோல் மற்றும் கழிவுகளால் மூடியிருப்பதைக் காண முடியும். ஒரு டேங்கிர்க்கு **15** மில்லி என்ற அளவில் இமிடாகுளோபிரிடு மருந்தினை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

***மிளகாய்***

*தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ள ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு **10** என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம். தாக்குதல் அதிகம் காணப்படும் நேரங்களில் **1** லிட்டர் தண்ணீரில் **50** கிராம் வேப்பங் கொட்டை கரைசல் அல்லது **30** மில்லி வேப்ப எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும்.*

***முருங்கை***

*முருங்கைப் பயிரைத் தாக்கும் பழ ஈக்கள் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை ஈக்களின் தாக்குதலால் காய்கள் காய்ந்தும், பிளந்தும் காணப்படும். காய்களில் இருந்து தேன் போன்ற திரவம் வடியும். தாக்கப்பட்ட மற்றும் காய்ந்து விழுந்த காய்களை சேகரித்து அழிக்க வேண்டும். ஏக்கருக்கு **7** என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து இதனைக் கட்டுப்படுத்தலாம். சிட்ரோனல்லா எண்ணெய், நீலகிரி தைலமர எண்ணெய், வினிகர் (அசிட்டிக்அமிலம்), டெக்ஸ்ட்ரோஸ் அல்லது லாக்டிக் அமிலம் இவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு **3**மி.லி என்ற அளவில் நிம்பிசிடின் மருந்தினை கலந்து **50** சதம் காய் உருவான பிறகு மற்றும் **35** நாட்கள் கழித்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

**வாழை**

வாழை பயிரில் மஞ்சள் இலைப் புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் அறிகுறியாக, இலையின் இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இடையில் சிறிது நிறமாற்றம் ஏற்படும். ஒரு காலகட்டத்தில் இந்த புள்ளிகள் வெளிறிய மஞ்சள் கோடுகள், பழுப்பு நிற கோடுகள் மற்றும் நீள் வட்ட புள்ளிகளாக உருவாகி, இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இணையாக காணப்படும். இந்நோய் பாதித்த வாழையில் உள்ள இலைகள் கருகி உதிர்ந்து விடும். இந்நோயானது பயிர்களிடையே வேகமாக பரவும் தன்மையுடையது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சூடோமோனஸ் புளுரோசன்ஸ், 10 கிராம் பேசிலஸ் சப்டிலஸ், 10மில்லி பஞ்சகவ்யம், 5 கிராம் நாட்டு சர்க்கரை இவற்றை கலந்து நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும்.

**திராட்சை**

திராட்சை பயிரில் பறவைக்கண் புள்ளி (ஆந்த்தராக்னோஸ்) நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது. இந்நோயின் அறிகுறியாக பழங்களின் மேல் ஆழ்ந்த சிவப்பு நிறப் புள்ளிகள் முதலில் தோன்றும். பின் தண்டுகள், பற்றிழைகள், இலைக்காம்புகள், இலை நரம்புகள், மற்றும் பழத் தண்டுகளிலும் நோய் பூசணங்களிலும் தாக்குதல் காணப்படும். தாக்கப்பட்ட கொடிகளின் பகுதிகளை அகற்றவும், மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 20கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்ஸிக்ளோரைட் மருந்தினை தேவையான அளவு தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**மல்லிகை**

மல்லிகை மலர்வகை பயிர்களில் நூற்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் மாதிரி எடுத்து நூற்புழு தாக்குதலைக் கண்காணிக்க வேண்டும். தாக்குதலின் அறிகுறியாக மல்லிகை செடிகளின் இலைகள் வெளிரிய இளம் மஞ்சளாகி பின்னர் கருகிவிடும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பேசிலோமைசிஸ் லிலாசினஸ் எனும் உயிரி இடுபொருளை வேர்ப்பாகத்தின் அருகில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**ரோஜா**

நிலவும் பருவச்சூழ்நிலையில் ரோஜா பூப்பயிரில் சாம்பல் நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இந்நோயின் தாக்குதலினால் இலைகள், தளிர்கள் மற்றும் மொட்டுகளில் சாம்பல் வெள்ளை நிற துகள்கள் காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் சிதைந்து விடும் மற்றும் சில இலைகள் உதிர்ந்து விடும் பூ மொட்டுகள் மலராமலும், தரமற்ற மலர்ககளையும் உருவாக்கலாம். உதிர்ந்த இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். இந்நோயினைக் கட்டுப்படுத்த 30கிராம் நனையும் கந்தகம் என்ற மருந்தை 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்கலாம்.

- ✓ மருந்து தெளிக்கும் வேலைகளை, மழை இல்லாத நாட்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

**கால்நடை**

இரவு நேர வெப்பநிலை மிகக் குறைந்து காணப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கொட்டைகைகளில் கட்டி வைக்கவும். கொட்டகையை சுற்றி சாக்கு பைகளை கொண்டு மறைத்து கட்டவும்.

கால்நடைகளை சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் முக்கியமாக தெளிவாக இருந்து மேகமூட்டமாக காணப்படும். 17.12.2025 அன்று மிக இலேசான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 18-21°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 05-07°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- பூண்டு ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம். பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதா நிற கருகல் நோய் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி தெளிக்க வேண்டும்.
- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில் இட வேண்டும்.
- தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள் பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும். ஹெக்ஸகோனசோல் @ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம்/ எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது) காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம் + புரோபிகோனசோல் @ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களையிரிடவும் மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும். ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) ப்ரோபிகோனசோல் 25% EC @ 125 - 250ml/ha (அல்லது) கார்பென்டாசிம் 12% + மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha.
- காஃபி பழத் துளைப்பான் 1. சரியான பயிர்சாகுபடி முறைகளை கையாள வேண்டும். 2. தாக்கப்பட்டகாஃபிவிதைகளை ஒரு இடத்தில்இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லக் கூடாது. 3. பழம் சேகரிக்க உதவும் பைகளை பூச்சிக்கொல்லி கொண்டு புகையூட்ட வேண்டும். 4. பாதிக்கப்பட்ட பழங்களை கொதிக்கும் நீரில் 2-3 நிமிடங்கள் நனைப்பது உள்ளே உள்ள வண்டுக்களின் அனைத்து நிலைகளையும் கொல்லும். 5. காபி கொட்டைகளை உலர்த்துவது – ஈரப்பத அளவை அடிப்படையாகக் கொண்டு சேமிக்கப்பட்ட காபியில் வண்டுகள் இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்கலாம். (அதாவது அரபிக்காவகை - 10 சதம் ஈரப்பதம் & ரொபஸ்டா வகை - 11 சதம் ஈரப்பதம்). மேலும், அடுக்கு புனல் பொறி மற்றும் பதுங்கு குழி பொறி போன்ற பொறிகளை அமைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். பிவேரியா பாசியானா என்ற பூஞ்சாண உயிர்கொல்லியை தெளிப்பதன் மூலமும் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். இயற்கை எதிரிகளான செபலோனோமியா ஸ்டீபன்டாரிக்ஸ் மற்றும் பிமாஸ்டிகஸ் காபி போன்ற ஒட்டுண்ணிகளை வயல் வெளியில் விடுவதன் மூலம் இப்பூச்சியின் பரவல் மற்றும் எண்ணிக்கையை குறைக்கலாம்.
- இஞ்சி மென் அழுகல் மேலாண்மை நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம்/லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை @ 1%என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் தெளிவாகக் காணப்படும் மற்றும் *17.12.2025, 18.12.2025* ஆகிய தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை *29-31*$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை *21-22*$^{o}$செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் *80* சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் *40* சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு *08-10* கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ***மிளகாய் பயிரில்*** தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக **இலைப்பேன்** தாக்குதல் தென்படுகிறது. இதனால் இலைகள் மஞ்சள் நிறத்தில் மேல்நோக்கி சுருண்டு, வளர்ச்சி குன்றியும், பூக்கள் உதிர்ந்தும் மற்றும் காய்கள் முதிர்வடையாமல் காணப்படுகிறது. எனவே விவசாயிகள் இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஊதா வண்ண ஒட்டும் பொறியை ஒரு ஏக்கருக்கு *5* என்ற அளவில் வைக்க வேண்டும். வேப்ப எண்ணெய் ஒரு லிட்டர் தண்ணீருக்கு *3* மி.லி என்றளவில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் பொருளாதார சேதநிலையை தாண்டும் பட்சத்தில் தயாமீத்தாக்சாம் என்ற இரசாயன பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு *1* கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் கடும் பனிப்பொழிவின் காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள **மஞ்சள் பயிரில் இலைக்கருகல் நோய்** தென்படுகிறது. இதன் அறிகுறிகளானது, புள்ளிகள் வளர்ந்து ஒன்றிணைந்து, பெரிய, ஒழுங்கற்ற, சிவப்பு-பழுப்பு நிறப் புள்ளிகளை (புண்கள்) உருவாக்குகின்றன. இலைகள் சிதைந்து கிழிந்து போகக்கூடும். மேலும் கடுமையாக பாதிக்கப்பட்ட இலைகள் வாடி காய்ந்து, கருகிய தோற்றத்துடன் காணப்படும். இதன் பரவலைக் கட்டுப்படுத்த மான்கோசெஃப் அல்லது சாப் என்ற இரசாயன பூஞ்சாணக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு *2* கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து இலைவழியாகத் தெளிக்கவும்.
- காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், பூக்களின் உதிர்வைக் குறைத்து பூக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், காய்களின் எடை மற்றும் எண்ணிக்கையை அதிகரித்து அதிக மகசூல் பெற **காய்கறி நுண்ணூட்டக்கலவையை** ஒரு லிட்டர் தண்ணீருக்கு *5* கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்த இலைவழி தெளிப்பாக *15* நாட்கள் இடைவெளியில் *3* முறையாவது கட்டாயம் தெளிப்பு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கால்நடை ஆலோசனைகள்**

<u>**முட்டைக்கோழிகளில் முட்டை ஓட்டின் தர மேலாண்மை**</u>

- முட்டைக்கோழிகளில் முட்டை ஓட்டின் தரத்தில் அதிக அளவில் குறைபாடு தென்படுகிறது. பகல் வெளிச்சம் குறைவாக இருப்பதாலும், மேகமூட்டம் மற்றும் லேசான மழை காணப்படுவதாலும், தீவன எடுப்பு அதிகரித்து முட்டையின் எடை கூடி, முட்டை ஓட்டின் தரத்தை பாதிக்கின்றது.
- ஆகவே முட்டை ஓட்டின் தரத்தை உயர்த்தவும், முட்டை உற்பத்தியினை தக்கவைத்துக் கொள்ளவும். தீவனத்தில் வைட்டமின் டி3 தனியாக கிலோவிற்கு *3000*ஐயூ என்ற அளவில் சேர்த்து வரவேண்டும்.
- மேலும் தீவனத்தில் எரிசக்தியின் அளவை *2550* கிலோ கலோரிக்கு குறையாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- இதனால் தீவன எடுப்பு அதிக அளவில் உயராமல் *108-110* கிராம் என்ற அளவிலேயே இருக்கும்.

- தீவனத்தில் குருணை சற்று அதிகமாக சேர்ப்பதன் மூலம் கோழிகளுக்குக் கால்சியம் சத்துக் கிடைக்கும். இதனால் முட்டையின் ஓடுகள் சற்று கடினமாக எளிதில் உடையாதவாறு கிடைக்கும்.
- குளிர்ச்சியான காலை மற்றும் மாலை வேளைகளில் விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்த தீவனங்களை அளிக்கவேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்துார், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 08-14 கி.மீ ஆகவும் பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- நெல் வயல்களில் முறையான வடிகால் வசதியை மேம்படுத்தி வயல்களில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும். மேலும் பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பினை தவிர்க்கவும்.
- அறுவடை செய்த பயிர்களை நனையாமல் உயரமான இடங்களுக்கு மாற்றி தார்ப்பாய்களை கொண்டு மூடவும்.
- பழமரங்களில் காற்று புகும் வகையில் கிளைகளை வெட்டுதல் வேண்டும்.
- காற்றின் வேகம் அதிகமாக காணப்படலாம் என்பதனால் வாழை பயிர்களுக்கு மரகொம்புகளை கொண்டு முட்டு கொடுக்கவும்.
- பலத்த காற்று வீச தொடங்குவதற்கு முன் முதிர்ச்சி அடைந்த தேங்காய் மற்றும் இளநீர் காய்களை அறுவடை செய்ய வேண்டும். தலைப்பகுதியின் கீழ் பகுதியுள்ள அதிக எடையுள்ள ஓலைகளை வெட்டி அகற்ற வேண்டும் மற்றும் மரங்களில் அடி பகுதியில் மண்ணால் உயரமாக அணைக்க வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- தீவன மற்றும் தண்ணீர் தொட்டிகளை கிளோரின் டை ஒஸ்சிட் அல்லது பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தமாக கழுவி விட வேண்டும்.
- நீரில் நனைத்த வைக்கோல் அல்லது உலர்தீவனங்களை அப்புறப்படுத்த வேண்டும் அல்லது இயந்திர உலதிகளில் இட்டு காய வைக்க வேண்டும.
- அடுத்த சில நாட்களுக்கு கால்நடைகளுக்கு தேவையான குடிநீரை வெப்பநிலைக்கு தகுந்தவாறு சூடாக்கி கொடுக்க வேண்டும்.
- கால்நடைகள் படுக்கும் இடங்களில் உலர்ந்த பொருட்களை பயன்படுத்தவும்.
- கன்று ஈனும் நிலையிலுள்ள கறவை மாடுக்கு / ஆடுகளை வசதியான உலர்வான இடத்தில் தங்க வைக்க வேண்டும்.
- இளம் கன்றுகள் / ஆட்டுக்குட்டிகள் இருக்கும் கொட்டகைகளில் தரையில் உலர்ந்த வைக்கோலை பரப்பி வைத்தால் குளிர் அழற்சிக்கு உள்ளாகாமல் பாதுகாக்கலாம்.
- மழைநீர் புகுந்த இடங்களில் இருக்கும் கால்நடைகளை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். இல்லையெனில் குளம்பு அழுகல் நோய் ஏற்படும்.
- நோய் தொற்றை தடுக்க பீனோல் / குர்டினிரி அம்மோனியம் தொகுகிகளை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
- இறந்த கால்நடைகளை முறையாக புதைக்க வேண்டும், அதை ஆற்றிலோ, குளத்திலோ வீசி எறியக்கூடாது.

- நோய் தொற்றை தடுக்கும் அண்டி பையோட்டிக் மருந்துகள், திரவியங்கள் போன்றவற்றை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் 17.12.25 மற்றும் 18.12.25 அன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 27 - 29$^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 22 - 24 $^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 – 80 % பதிவாக வாய்ப்புள்ளது. மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 60 % பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 12 – 18 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- தோட்டக்கலை பயிர்களான வாழை, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப்பட்டை மற்றும் தென்னை மரங்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.
- கிராம்பில் மழை மிக குறைவாக இருப்பதால் மரங்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- வாழையில் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் பிராபிகோனோசல் 1 மி.லி. + ஒட்டும் திரவம் 0.5 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- காய்க்கும் தென்னை மரங்களுக்கு **6** மாதங்களுக்கு ஒரு முறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தென்னை டானிக் மரம் ஒன்றிற்கு **200** மில்லி வீதம் வேர்வழியாக அளிக்கவும்.
- மர வாசனைப் பயிர்களில் பண்ணைக் கழிவுகளைக் கொண்டு நிலப் போர்வை அமைத்து மண்ணின் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- வாழை மரங்களுக்கு காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் குலை தள்ளிய வாழை மரங்களுக்கு மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க., கோவை**